00004

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025

மட்டம் - 08

இறுதிப் பரீட்சை – 2024/2025

**SNP8335– விசேட தேவைகள்சார் கல்வியில் சமூகவியல் அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.07.2025 நேரம்: பி.ப. 02.00 - பி.ப 05.00

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. இயலாமையுள்ள பிள்ளைகளைச் சமூகமயமாக்குவதன் முக்கியத்துவத்தை ஒரு உதாரணத்தை மேற்கோள் காட்டி விளக்குக.
2. சமூகமயமாக்கலின் **இரண்டு** (02) பிரதான முகவர்களைப் பட்டியலிட்டு விபரிக்குக.
3. விதிமுறைகள் மற்றும் விழுமியங்கள் (Norms and Values) ஆகியனவற்றிற்கு இடையிலான முக்கிய வேறுபாடுகளை விபரிக்குக.
4. இயலாமையுள்ள பிள்ளைகளின் முதன்மை சமூகமயமாக்கலில் குடும்பத்தின் பங்கை விளக்குக.
5. இயலாமையுள்ள ஒருவரின் வாழ்நாளில் சமூகப் பெயர்ச்சியின் (Social Mobility) முக்கியத்துவத்தை ஒரு உதாரணத்தை மேற்கோள் காட்டி பகுப்பாய்வு செய்க.
6. இயலாமையுள்ள பிள்ளைகளின் சமூகமயமாக்கலின் இரண்டாம் நிலை காரணியாக வெகுஜன ஊடகங்களின் தாக்கத்தை விபரிக்குக.
7. **மூன்று** (03) பெற்றோரியல் பாங்குகளைச் (Parenting styles) சுருக்கமாக விளக்குக.
8. கட்டிளமைப் பருவத்தில் இயலாமைகளுள்ள பிள்ளைகளின் சமூகமயமாக்கலில் சாதாரண சகபாடிகள் செல்வாக்கு செலுத்தக்கூடிய **இரண்டு** (02) வழிகளை பரிந்துரை செய்க.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. **i.** ஒரு உதாரணத்தை மேற்கோள் காட்டி சமூகமயமாக்கல் என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக.

(04 புள்ளிகள்)

**ii.** சமூகமயமாக்கலுக்கும் கலாசாரத்திற்கும் இடையிலான தொடர்பை நான்கு (04) உதாரணங்களை முன்வைத்து ஆராய்க.

(08 புள்ளிகள்)

**iii.** உள்ளடங்கல் கல்வி நடைமுறைகளுக்கு உதவும் வகையில் ஆசிரியர்கள் சமூகமயமாக்கல் பற்றிய புரிதலை எவ்வாறு பயன்படுத்தலாம்?

(08 புள்ளிகள்)

10. i. சமூகமயமாக்கல் முகவராக மாற்றுத்திறனாளி குழந்தை உள்ள ஒரு குடும்பத்தின் செயல்பாடுகள் யாவை?

(05 புள்ளிகள்)

ii. குடும்பத்தின் பல்வகைமை சமூகமயமாக்கல் செயல்முறையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை பகுப்பாய்வு செய்க.

(06 புள்ளிகள்)

iii. இயலாமைகள் உள்ள பிள்ளைகளுக்கான குடும்பத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறைகளின் செயல்திறனை மதிப்பிடுக.

(09 புள்ளிகள்)

11. i. சகபாடிக் குழுக்களின் சூழமைவை எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விபரிக்குக.

(04 புள்ளிகள்)

ii. இயலாமைகள் உள்ள பிள்ளைகளின் சமூக விருத்திக்கு சகபாடிக் குழுக்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை பகுப்பாய்வு செய்க.

(06 புள்ளிகள்)

iii. உள்ளடங்கல் வகுப்பறைகளில் நேர்மறையான சகபாடிகளைத் தொடர்புகளை ஊக்குவிப்பதற்கான உத்திகளை முன்மொழிக.

(10 புள்ளிகள்)

12. i. நியமங்கள் மற்றும் விழுமியங்கள் என்றால் என்ன?

(04 புள்ளிகள்)

ii. இயலாமைகள் உள்ள பிள்ளைகளின் சமூகமயமாக்கலில் கலாசார விதிமுறைகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. உள்ளடங்கல் பாடசாலை அமைப்புக்களில் பாலின பக்கச் சார்புகளை (Gender biases) நிவர்த்தி செய்வதற்கான வழிகளைப் பரிந்துரைக்குக.

(09 புள்ளிகள்)

13. i. இயலாமைகள் உள்ள பிள்ளைகள் எதிர்கொள்ளும் சமூகம்சார் சவால்களை விபரிக்குக.

(03 புள்ளிகள்)

ii. பல்வகைமைத் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் உள்ளடங்கலை ஊக்குவிப்பதில் பாடசாலைகளின் பங்கை மதிப்பிடுக.

(07 புள்ளிகள்)

iii. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் சமூகமயமாக்கலுக்கு உதவும் ஒரு உள்ளடங்கல் வகுப்பறைச் செயற்பாட்டை எவ்வாறு வடிவமைக்கலாம்.

(10 புள்ளிகள்)

14. i. உள்ளடங்கற் கல்வியில் ஆசிரியர்களின் பங்கை விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. உள்ளடங்கற் கல்வியை செயற்படுத்துவதில் இலங்கை கல்விமுறை எதிர்கொள்ளும் நான்கு (04) சவால்களை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. உள்ளடங்கற் கல்வியை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட உங்கள் பிராந்தியத்தில் தற்போதைய கொள்கைகள் அல்லது திட்டங்களை மதிப்பிடுக.

(08 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -